**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை</u>**

முன்னிலை : திரு.எம்.ரவிச்சந்திரன், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பட்டுக்கோட்டை.

2022 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 13 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவராண்டு2053-ஸ்ரீசுபகிருது வருடம் கார்த்திகைத் திங்கள் 27 ஆம்நாள்

**<u>இடைநிலை மனு எண் 630/2021</u>**

**<u>இன்</u>**

**<u>அசல் வழக்கு எண். 70/2021</u>**

1. லெட்சுமிகாந்தன்
2. ரஜினிகாந்தன் ... மனுதாரர்கள் /உத்தேச தரப்பினர்கள்

/ எதிர் /

1. மணிவாசன் ... 1 ம்எதிர்மனுதாரர்/ வாதி
2. சீனிவாசன்
3. சாமிநாதன் ... 2 ,3 எதிர்மனுதாரர்கள்/ 1,2 பிரதிவாதிகள்

இம்மனு 29.11.2022-ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஜி. ஜெயக்குமார் அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. வீ. பிரகாஷ் அவர்கள் ஆஜராகியும், 3 ம் எதிர்மனுதாரர்/2 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. எல். வைத்தியநாதன் அவர்கள் ஆஜராகியும், 2 ம் எதிர்மனுதாரர்/1 ம்பிரதிவாதி தோன்றாதரப்பினராக கொண்டும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

**Sd/- M. Ravichandran,**

**உத்தரவு**

இந்த மனுவானது மனுதாரர்கள்/ உத்தேச தரப்பினர்களால் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10(2)-ன் படி உத்தேசத்தரப்பினர்களை அசல் வழக்கில் 3,4 பிரதிவாதிகளாக சேர்க்க அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:-**

மனுதாரர், தாவாவில் 3 ம் தரப்பினர் என்றும், தாவா சொத்தையும் அதில் உள்ள ஆழ்குழாய் கிணற்றையும், மின் மோட்டாரையும், மின் இணைப்பையும், வாதி எதிர்வாதிகளுடன் கூட்டாக எப்போதும்போல் அமைதியாக அனுபோகம் செய்து வருவதை எதிர்வாதிகளோ, அவரைச் சேர்ந்தவர்களோ எந்தக்காலத்திலும், எவ்வித தடை தகராறுகளும் செய்யக்கூடாது என நிரந்தர தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்து மற்றும் வேறு பல சொத்துக்களை பொறுத்து உபயவாதிகள் குடும்பத்தில் பாக ஒழுகு சீட்டு எழுதிக்கொடுத்துள்ளதாக கண்டிருப்பது சரியல்ல என்றும், அதில் மனுதாரரின் தாயார் உள்பட பெண்பிள்ளைகள் பாகம் வேண்டாம் என்று கூறியதால் மேற்படி பாக ஒழுகு சீட்டில் கையெழுத்து போடவில்லை என்று கண்டிருப்பது சுத்த பொய் என்றும், அதன் அடிப்படையில் உபயவாதிகள் பாக பத்திரம் எழுதிக்கொண்டுள்ளதாகவும் கண்டிருப்பது சரியல்ல என்றும், தாவா சொத்தில் வாரிசுதாரர் என்ற முறையில் மனுதாரரின் தாயாரான ஜீவரெத்தினத்திற்கு பாக பாத்தியம் உள்ளது என்றும், மனுதாரரின் தாயாரும், தகப்பனாரும் இறந்துவிட்டார்கள் என்றும், மனுதாரரின் பெற்றோர்களுக்கு மனுதாரரும், மனுதாரரின் சகோதரரான ரஜினிகாந்தனும்

**Sd/- M. Ravichandran,**

வாரிசுதாரர்கள் என்றும், அதன் அடிப்படையில் தாவா சொத்தில் மனுதாரருக்கு பாக பாத்தியம் உள்ளது என்றும், இந்நிலையில், மனுதாரரும், மனுதாரரின் சகோதரர் ரஜினிகாந்தும் இவ்வழக்கில் தேவையான மற்றும் அவசியமான தரப்பினர்கள் என்றும், உபயவாதிகள் ஒன்று சேர்ந்து கொண்டு ஏதோ உள்நோக்குடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், இந்நிலையில் மனுதாரரையும், மனுதாரரின் சகோதரரையும் அவசியமான தரப்பினர்களாக ஏற்றுக்கொண்டு இவ்வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டியது அவசியமும், நியாயமுமாக இருக்கிறது என்றும், இல்லாதபட்சத்தில் வாரிசுதாரர்கள் என்ற முறையில் மனுதாரர்களின் பாத்தியமும் பாதிக்கப்படும் என்றும், எனவே உத்தேச தரப்பினர்களை அசல் வழக்கில் 3,4 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டியது அவசியம் என மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

<u>2. 1ம்எதிர்மனுதாரர் /வாதி தரப்பு எதிர் உரையின் சுருக்கம்</u>

மனுதாரர் மனு அபிடவிட்டில் கண்ட சங்கதிகள் யாவும் சுத்தப்புரட்டும், மோசடியானவை என்றும், உபயவாதிகள் பொதுக்குடும்ப சொத்துக்களை பொறுத்து மேற்படியார்களின் தகப்பனார் கந்தசாமி வேளாளர் உயிருடன் இருந்த காலத்திலேயே 19.01.1989 ம் தேதியில் ஒரு பாக சீட்டு குடும்ப ஆண் மக்களை பொறுத்து மட்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், அதில் மனுதாரரின் தாயார் உள்ளிட்ட அனைத்து பெண் மக்களும் பாகம் வேண்டாம் என்று கூறிவிட்டதால் மேற்படியார்கள் யாரும் மேற்படி பாக சீட்டில் கையெழுத்து போடவில்லை என்றும், பின்னிட்டு ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட 01.11.1990 ம் தேதியில் எழுதிக்கொண்ட பாக பத்திரத்திலும் ஏற்கனவே பெண் மக்கள் பாகம் வேண்டாம் என்று கூறிவிட்டதன் அடிப்படையில் தான் பெண் மக்கள் யாரையும் தரப்பினராக சேர்க்கவில்லை என்றும், மனுதாரரின் தாயார் ஜீவரெத்தினம் பாகம்

**Sd/- M. Ravichandran,**

வேண்டாம் என்று கூறிவிட்ட பிறகு மேற்படியாருக்கு பொதுக்குடும்ப சொத்தில் எந்தவித பாக பாத்தியமும் கிடையாது என்றும், அதன் அடிப்படையில் அவருக்கு பிறகு அவரது வாரிசுகள் எவ்வித பாக பாத்தியமும் கோரமுடியாது என்றும், மனுதாரருக்கும், அவரது சகோதரருக்கும் மேற்படி சொத்தில் எவ்வித உரிமையும் இல்லாத நிலையில் மேற்படியார்கள் தாவா வழக்கில் தேவையில்லாத மற்றும் அவசியமில்லாத தரப்பினர்கள் என்றும், மேலும் மனுதாரரின் தாயார் பாக பாத்தியம் வேண்டாமென்று கூறிவிட்டதால் தான் மேற்படி பாகச்சீட்டு மற்றும் பாகப்பத்திரம் பற்றிய விபரங்கள் அவருக்கு நன்கு தெரிந்திருந்தும் அவர் உயிரோடு இருக்கும்வரையில் எவ்வித பாத்திமும் கோரவில்லை என்றும், தாவா வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி தொடரப்பட்டுள்ளது என்றும், மனுதாரருக்கு தாவா சொத்தை பொறுத்து எவ்வித உரிமையும் இல்லாத நிலையில் மேற்படி வழக்கில் அவர் தேவையில்லாத தரப்பினர் என்றும், அவ்வாறு உரிமை ஏதேனும் இருந்து அவர் கட்சி செய்ய வேண்டுமெனில் தனி வழக்கு தான் தொடர வேண்டும் என்றும், மனுதாரரின் சகோதரரை மனுவில் தரப்பினராக காட்டாமல் அவருக்கும் சேர்த்து பரிகாரம் கோரியிருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், ஆகையால், மனுதாரரின் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறியுள்ளார்.

**3.** 3 ம் எதிர்மனுதாரர்/ 2 ம் பிரதிவாதி தரப்பில் எதிர் உரை தாக்கல் செய்ய போதிய காலஅவகாசம் அளித்தும் எதிர் உரை தாக்கல் செய்யாததால் இந்நீதிமன்றம் நீதியின் நலன்கருதி 3 ம் எதிர்மனுதாரர் / 2 ம் பிரதிவாதி தரப்பில் எவ்வித எதிர்உரையும் இல்லை என முடிக்கப்பட்டது.

**Sd/- M. Ravichandran,**

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதியாதெனில்,
“ மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா?
என்பதேயாகும் ”.

**6. <u>தீர்வு</u>**

இருதரப்பிலும் கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலனை செய்ததில், தாவா சொத்தையும் அதில் உள்ள ஆழ்குழாய் கிணற்றையும், மின் மோட்டாரையும், மின் இணைப்பையும், வாதி, எதிர்வாதிகளுடன் கூட்டாக எப்போதும்போல் அமைதியக அனுபோகம் செய்து வருவதை எதிர்வாதிகளோ, அவரைச் சேர்ந்தவர்களோ எந்தக்காலத்திலும், எவ்வித தடை தகராறுகளும் செய்யக்கூடாது என நிரந்தர தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதை எதிர்த்து பிரதிவாதிகள் தரப்பில் கட்சியாடி வந்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனைவதற்காக வாய்தா எழுந்த நிலையில், மனுதாரர்கள் / உத்தேச தரப்பினர்கள் அசல் வழக்கில் 3,4 பிரதிவாதிகளாக சேர்க்கக்கோரி மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

7. மனுதாரர் / உத்தேச தரப்பினர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்தில் வாரிசுதாரர் என்ற முறையில் மனுதாரரின் தாயாரான

Sd/- M. Ravichandran,

ஜீவரெத்தினத்திற்கு பாக பாத்தியம் உள்ளது என்றும், மனுதாரரின் தாயாரும், தகப்பனாரும் இறந்துவிட்டார்கள் என்றும், வாரிசு உரிமை அடிப்படையில் தாவா சொத்தில் மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்களுக்கு பாகம் உண்டு என்பதால் மனுதாரர்களை அசல் வழக்கில் 3,4 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டுமென தெரிவித்துள்ளார்.

**8.** எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் தாவா சொத்தை பொறுத்து உபயவாதிகளின் தகப்பனார் கந்தசாமி வேளாளர் உயிருடன் இருந்த காலத்திலேயே 19.01.1989 ம் தேதியில் ஒரு பாக சீட்டு குடும்ப ஆண் மக்களை பொறுத்து மட்டுமே ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், அதில் மனுதாரரின் தாயார் உள்ளிட்ட அனைத்து பெண் மக்களுக்கும் பாகம் வேண்டாம் என கூறிவிட்டதால் மேற்படி பாக சீட்டில் கையெழுத்து போடவில்லை என்றும், பின்னிட்டு, 01.11.1990 ம் தேதியில் ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட பாக பத்திரத்திலும் ஏற்கனவே பெண் மக்கள் பாகம் வேண்டாம் என கூறிவிட்டதன் அடிப்படையில் தான் பெண் மக்கள் யாரையும் தரப்பினர்களாக சேர்க்கவில்லை. மனுதாரர்களின் தாயார் ஜீவரெத்தினம் பாகம் வேண்டாம் என்று கூறிவிட்ட பிறகு பொதுக்குடும்ப சொத்தில் எவ்வித பாக பாத்தியமும் கிடையாது என்றும், அசல் வழக்கு தாவா சொத்தை பொறுத்து நிரந்தர தடை உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்கள் அசல் வழக்கில் அவசியமான தரப்பினர்கள் அல்ல என்றும், மனுதாரரின் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென வாதுரைக்கப்பட்டது.

**9.** தாவா சொத்தை பொறுத்து உபயவாதிகளுக்கு இடையே 19.01.1989 ல் பாக சீட்டு ஏற்பட்டும், பின்னர் 01.11.1990 ல் பாக பத்திரமும் எழுதி பதிவு செய்யப்பட்டுள்ளது.

**Sd/- M. Ravichandran,**

மனுதாரர்களுக்கு தாவா சொத்தில் உரிமை மூலம் இருந்தால் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தனியாக தான் வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றும், அசல் வழக்கானது நிரந்தர தடை உறுத்துக் கட்டளை பரிகாரத்தை பொறுத்து மட்டும் தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்கள் அசல் வழக்கிற்கு அவசியமான தரப்பினர்கள் அல்ல என்றும், மனுதாரர்களின் மனுவானது நீதியின் நலன் கருதி ஏற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக இம்மனு தள்ளுடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்ல சொல்ல அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2022 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 13 ம் நாள் கையொப்பம் இடப்பட்டு அவையறிய பகரப்பட்டது.

**Sd/- M. Ravichandran,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பட்டுக்கோட்டை.

<u>இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>

இல்லை.

**Sd/- M. Ravichandran,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பட்டுக்கோட்டை.

**Sd/- M. Ravichandran,**